# வையாசிக நியாயமாலா

## "திராவிடாசாரியார்" ஸ்ரீ இராமகிருஷ்ணன் சுவாமிஜி

### முன்னுரை

தான் இயற்ற இருக்கும் இந்த கிரந்தமானது எந்த தடையுமின்றி முழுமை அடையவும், அது மக்களால் ஏற்றுக்கொள்ளப்படவும், சிஷ்டாசாரம் எனப்படும் பரம்பரையினை படிப்பிக்கவும் (மங்களம் எழுதும் முறை அவசியம் என்று) குருவுருவை தாங்கியிருக்கும் இஷ்ட தேவதையினை நமஸ்கரித்து இந்த புத்தகத்தினை துவங்க சூளுரைக்கின்றார் (தீர்மானத்தை வெளிப்படுத்துகின்றார்)

ஸ்ரீ வித்யா தீர்த்தர் உருவம் தாங்கிய பரமாத்மாவிற்கு நல்ல முறையில் நமஸ்காரம் செய்து, வையாசிக நியாயமாலாவினை சுலோகம் மூலமாக என்னால் சங்கிரகம் செய்யப்படுகின்றது. ___ 1

பிரணம்ய என்று - வியாசரினால் கூறப்பட்டது என்பது இலக்கணப்படி வையாசிகம் ஆகின்றது. வேதாந்த வாக்கியத்தின் பொருளை நிர்ணயிப்பதான அதிகரணங்களுக்கு (சூத்திரங்களின் தொகுப்பின் தலைப்பு) நியாயம் என்று பெயர். அதனை முறையாக தொடுப்பது மாலை ஆகின்றது. இதனை சூத்திரக்காரர் மற்றும் பாஷ்யகாரர் முதலியோர் மிகவும் விளக்கமாக கூறியிருந்தாலும் அவை கூர்மையான புத்தியுள்ளவர்களால் மட்டுமே அறிந்துகொள்ள இயலும் என்பதால், மந்தபுத்தி உள்ளவர்களை அனுகிரகிப்பதற்கு சுலோகங்கள் மூலம் இந்த மாலையினை அழகாக தொடுக்கின்றோம். -1

இங்கு கூறப்பட்ட ஒவ்வொரு அதிகரணமும் ஐந்து பகுதிகள் உடையது. விஷயம், சந்தேகம், சங்கதி, பூர்வக்ஷம் மற்றும் சித்தாந்த பக்ஷம் என்பதே ஐந்து பாகங்கள். அதனை தொகக்கும் முறை கூறப்படுகின்றது.

முதல் சுலோகத்தில் விஷயம், சந்தேகம் மற்றும் பூர்வபக்ஷமானது கூறுவதாக இருக்கும். இரண்டாவது சுலோகத்தில் சிந்தாந்தமும் சங்கதியும் தெளிவாக்கப்படும். -2

இங்கு ஒவ்வொரு அதிகரணத்தினையும் சங்கிரகம் செய்வதாக இரண்டு சுலோகங்கள் இருக்கும், அதனில் முதல் சுலோகத்தின் முன்பாகத்தில் இரண்டு அவயவங்களும், பின்பாகத்தில் ஒரு அவயவமும் சங்கிரகிக்கப்படும். இரண்டாம் சுலோகத்தின் மூலம் ஒரு அவயவம் கூறப்படுகிறது. இருந்தாலும், இங்கு சங்கதி எனப்படும் ஒரு அவயவமானது மீதமுள்ளது என்றாலும், ஒவ்வொரு அதிகரணத்தின் சங்தியும் தனித்தனியாக கூறப்பட அவசியம் இல்லை. ஒருமுறை இங்கு கூறப்பட்ட முறையினை புரிந்து கொண்டவர் அதனை தானே ஊகித்துகொள்ள இயலும் என்பதால். ___ 2

சங்கதியினை பகுத்து விளக்கமாக கூறுகிறார்

சாஸ்திரத்தில் கூறப்பட்டது, அத்யாயத்தில் கூறப்பட்டது மற்றும் பாதத்தில் கூறப்பட்டது என்று மூவகைப்படுகின்றது சங்கதி, சாஸ்திரம் முதலிய விஷயமானது அறியப்பட்ட பின்னர் அதனதன் சங்கதியினை நாமே யூகித்து கொள்ளவேண்டும். ___ 3

சாஸ்திரத்தினால் நிரூபிக்கப்படுவது, அத்யாயத்தில் நிரூப்பிக்கப்படுவது மற்றும் பாதத்தினில் நிரூபிக்கப்படுவதான பொருளை அறிந்துகொண்டு சாஸ்திரசங்கதி அத்யாயசங்கதி மற்றும் பாதசங்கதி என்ற மூன்று சங்கதிகளையும் யூகிக்க இயலும். -3

சாஸ்திரத்தால் நிரூப்பிக்கப்படுவது மற்றும் அத்யாயத்தால் நிரூபிக்கப்படுவது மற்றும் அத்யாயத்தால் நிரூபிக்கப்படுவதினையும் காண்பிக்கிறார்.

சாஸ்திரமானது பிரம்மத்தினை விசாரம் செய்வதாக இருக்கின்றது. அத்யாயமானது நான்கு வகைப்படுகின்றது. சமன்வயம், அவிரோதம், ஆகிய இரண்டு மற்றும் சாதனம் மற்றும் பலன் என்றும். ___ 4

எல்லா வேதாந்த வாக்கியமும் பிரம்மத்தினை நிரூபிப்பதிலேயே தாத்பர்யம் உள்ளது என்பது முதல் அத்யாயம் மூலம் நிரூபிக்கப்படுகின்றது. இரண்டாவது அத்யாயத்தின் மூலம் மற்ற மதங்களின் மூலம் ஏற்றிக்காண்பிக்கப்படும் விரோதமானது நீக்கப்படுகின்றது. மூன்றாவது மூலம் வித்யையினை அடையும் சாதனங்களானது (வழிகளானது) நிர்ணயம் செய்யப்படுகின்றது. நான்காவது

மூலம் வித்யையின் பலனானது நிர்ணயிக்கப்படுகின்றது. இதுவே அத்யாயத்தினால் நிரூப்பிக்கப்படுகின்றது. - 4

அதனில் முதல் அத்யாயத்தில் கூறப்படும் விஷயமானது பகுக்கப்படுகின்றது.

சமன்வய அத்யாயத்தில், ஸ்பஷ்டலிங்கம் (தெளிவாய் பிரம்மத்தினை குறிக்கும்) வாக்கியங்கள் விசாரிக்கப்படுகின்றது. அஸ்பஷ்டமானதும் உபாசனைக்குறிய (தெளிவாக பிரம்மத்தினை குறிக்காவிட்டாலும் உபாசனையினை குறிக்கும்) வாக்கியங்கள் இரண்டாம் பாதத்தினில் விசாரிக்கப்படுகின்றது. ஞேயம் (அறிபடு விஷயமான), தெளிவில்லாத வாக்கியங்களினை அறிபடு பிரம்மத்தினை குறிக்கும் விசாரம் மூன்றாம் பாதத்திலும். நான்காவது பாதத்தினில், தெளிவில்லாத பதங்களின் (சொற்களின்) விசாரம் செய்யப்படுகிறது. இந்த முறையில் நான்கு பாதத்திலும் விசாரம் செய்யப்படுகிறது. ___ 5

தெளிவாக பிரம்மத்தினை குறிக்கும் வாக்கியமானது முதல் பாதத்தில் விசாரம் செய்யப்படுகின்றது. அதாவது, "அந்தஸ்தத்தர்மோபதேசாத்" (1-1-20) என்பது மூலம் சர்வஞ்ஞத்தன்மை, சர்வாத்மத்தன்மை, எல்லா பாவமும் அற்றதன்மை முதலியவை பிரம்மத்தின் அசாதாரணமான (விசேஷமான) தெளிவான குறிகள். தேளிவில்லாததான பிரம்மத்தினை குறிக்கும் வாக்கியங்களான உபாசனை விஷயமான வாக்கியக் கூட்டங்களானது இரண்டாம் பாதத்தினில் விசாரம் செய்யப்படுகிறது. அதாவது, முதல்அதிகரண விஷயத்தில் ஷாண்டில்ய உபாஸ்தி வாக்கியத்தினில் மனோமயத்தன்மை, பிராண சரீரத்தன்மை முதலியவை சோபாதிகமான (வரையறை கூடிய) பிரம்மத்தின் மற்றும் ஜீவனின் சாதாரணத்தன்மை (தர்மம்) ஆனதால் தெளிவில்லாது பிரம்மத்தினை குறிக்கும் வாக்கியம் ஆகின்றது. மூன்றாம்பாதத்தல் தெளிவில்லாது பிரம்மத்தினை குறிப்பதாக இருந்து ஞேய (அறிபடு) பிரம்மத்தினை குறிக்கும் வாக்கிய கூட்டம் விசாரம் செய்யப்படுகிறது. அதாவது, முதலதிகரணத்தில் முண்டகோபநிஷத்தில் கூறப்பட்ட பிரம்ம-ஆத்மதத்துவத்தினை குறிக்கும் வாக்கியத்தினில், "யஸ்மின்த்யௌ ப்ருத்வீ சாந்தரிக்ஷமோதம் மன ஸஹ ப்ராணைஸ் ச ஸர்வை" என்பதில் மேல்லோகம், கீழ்லோகம் (பூமி) மற்றும் அந்தரிஷலோகம்(இடைலோகம்) சூத்திராத்மாவான (மாலையில் நூல் போன்ற) ஹிரண்யகர்பன் மற்றும் பரமாத்மாவினை குறிப்பதாக சாதாரண வாக்கியமாக இருப்பதால்அஸ்பஷ்ட பிரம்மலிங்கம் ஆகின்றது. ஆனால், இரண்டாவது பாதத்தின் கடோபநிஷத் பிரம்மதத்துவத்தினை குறிக்கும் வாக்கியமானது விசாரனை செய்யப்பட்டாலும். மூன்றாம் பாதத்திலும் தஹரோபாசனை

வாக்கியமானது விசாரனை செய்யப்பட்டாலும் அவாந்தர சங்கதி (இரண்டாம் / முக்கியமற் சங்கதி) விளக்கும் ஆசையினால் அதன் விசாரம் இங்கு பிரசங்கத்தினில் வந்ததால் இந்த இடத்தில் சாங்கர்யம் (கலப்படம்) என்ற தோஷத்தினை அடைவதில்லை. இவ்வாறு, மூன்று பாதங்கள் மூலம் வாக்கியங்களானது விசாரனை செய்யப்பட்டது. நான்காம் பாதத்தின் மூலம் அவ்வியக்தம், அஜா முதலிய சந்தேகத்திற்கிடமான பதங்களானது (சொற்களானது) குறித்து விசாரனை செய்யப்படுகின்றது. - 5

இரண்டாம் அத்யாயத்தில் உள்ள விஷயத்தினை பகுத்து காண்பிக்கின்றார்-

இரண்டாம் ஸ்மிருதி மற்றும் தார்கிகர் மூலம் உண்டாகும் விரோதமானது நீக்கப்படுகின்றது. இரண்டாவது பாதத்தில் மற்ற மதத்தின் தவறுகளும் பூத ஷ்ருதிகள், போக்த்ரு ஷ்ருதி (அனுபவிப்பவர் என்று கூறும்) மற்றும் லிங்க ஷ்ருதியானதும் விரோதமற்றது என்று நிரூபிக்கப்படுகின்றது. - 6

முதல் பாதத்தில் - சாங்கியர், யோகர், கனாதர் முதலியோரின் ஸ்மிருதிகளும் அவர்களின் தர்கத்தின் மூலம் வேதாந்தத்தில் தோன்றுவதான விரோதமானது நீக்கப்படுகின்றது. இரண்டாவது பாதத்தினில் - சாங்கியர் முதலியோரின் மதங்களானது தவறானது (பிரமாணமற்றது) என்பது காண்பிக்கப்படுகின்றது மூன்றாம் பாதத்தின் முதல் பாகத்தில், பஞ்சமகாபூத்தினை குறித்த ஷ்ருதிகளில் உள்ள விரோதமானது நீக்கப்படுகின்றது. நான்காம் பாதத்தில், லிங்க ஷ்ருதிகளின் விரோதமானது நீக்கப்படுகிறது. - 6

மூன்றாம் அத்யாயத்தில் கூறப்பட்ட விஷயம் பகுத்து கூறப்படுகின்றது ___

மூன்றாம் அத்யாயத்தினில் (சாதன அத்யாயம்) வைராகியம் நிரூப்பிக்கப்படுகிறது, "தத்-த்வம்" சொற்பொருளானது தெளிவாக்கப்படுகின்றது, பர-அபர பிரம்ம வித்யையின் குணங்களானது தெளிவாக்கப்படுகின்றது. தத்துவ ஞானத்தின் அந்தரங்க மற்றும் பகிரங்க (உள் மற்றும் வெளி) சாதனைகளின் விசாரமானது செய்யப்படுகின்றது. ___ 7

முதல் பாதத்தில் - ஜீவனானது பரலோகங்களுக்கு செல்தல்-வருதல் முதலியவை குறித்து விசாரம் செய்து வைராகியமானது நிரூப்பிக்கப்படுகின்றது. இரண்டாம் பாதத்தில் முன் பாகத்தின் மூலம் "த்வம்" (நீ) என்பதின் சொற்பொருள் பகுத்தறிவது, பின்பாத்தின் மூலம் "தத்" (அது) என்பதின் சொற்பொருள் பகுத்தறிவதும் செய்யப்பட்டுள்ளது. மூன்றாம் பாதத்தில் சகுண வித்யையில் குணங்களின் நலையும், நிர்குண பிரம்மத்தில் புணருக்தி(மீண்டும் கூறுதல்)

அல்லாத பதங்களின் நிலையும் தீர்மாணம் செய்யப்படுகின்றது. நான்காம் பாதத்தினிலோ ___ நிர்குண பிரம்ம ஞானத்திற்கு உபயோகமான பகிரங்க (வெளிப்புறம்) சாதனங்களான ஆஸ்ரமம் (வர்ணா-ஆஸ்ரமம்) யஞ்ஞம் முதலியவையும், அந்தரங்க (உட்புறம்) சாதனங்களான ஷமம் (அகக்கரண தண்டம்) தமம் (புரக்கரண தண்டம்) நிதித்யாசனம் முதலியவையும் நிரூப்பிக்கப்பட்டுள்ளது. - 7

நான்காம் அத்யாயத்தில் உள்ள பாதங்களை அடுத்து காண்போம் -

நான்காவதில் வாழும் போதே பிரம்ம சாக்ஷாத்காரத்தினால் உண்டாகும் முக்தி (ஜீவன் முக்தி) உபாசகர் மரணத்திற்கு பின்னர் அடையும் உத்தராயனத்தினை (உத்த வழி) குறித்த விசாரம், நிர்குண பிரம்மத்தினை அறிந்தவர் பிரம்மத்தை அடைதல் (அதாகவே இருத்தல் மற்றும் சகுண பிரம்ம உபாசகர் அடையும் பிரம்ம லோகத்தினை குறித்த விஷயமும் நிரூபிக்கப்படுகின்றது. - 8

முதல் பாதத்தில் - சிரவணம் முதலியவையினை தொடர்ந்து செய்வதால் நிர்குண பிரம்மத்தின் அல்லது உபாசனையால் சகுண பிரம்மத்தின் சாக்ஷாத்காரம் அடைந்து வாழும்போதே பாவ-புண்ணிய தீண்டல் இல்லாத நிலையான முக்தி கூறப்பட்டுள்ளது.

இரண்டாம் பாதத்தில் - இறப்பவர் அடையும் மேல்லோகம் குறித்த விசாரம் செய்யப்படுகின்றது.

மூன்றாம் பாதத்தில் - சகுண உபாசகர்கள் இறந்த பின்னர் அடையும் உத்தரமார்கமானது விளக்கப்பட்டுள்ளது.

நான்காம் பாதத்தில் - முன் பகுதியினில் நிர்குண பிரம்மத்தை உணர்ந்தவர் அடையும் விதேக முக்தியானது ( இறந்த பின்னர் அடையும் முக்தி) கூறப்பட்டுள்ளது. பின்பகுதியில் சகுண பிரம்மத்தை அறிந்தவரின் பிரம்மலோக அடைவினை நிரூப்பித்துள்து. இவ்வாறு பாதங்களானது சங்கிரகம் செய்யப்பட்டது. ___ 8

இருக்கட்டும், சாஸ்திரம், அத்யாயம் மற்றும் பாதத்தில் நிரூபிக்கப்பட்ட பொருளானது இவ்வாறு இருந்தாலும். ஆதனால் என்ன ஆகிவிட்டது என்றால் முக்கியமான மூன்றுவித சங்கதிகளை இவ்வாறு யூகித்து பின்னர் அவாந்தர (இரண்டாம் பட்சம் அல்லது முக்கியமற்ற) சங்கதிகளான ஆக்ஷேபம் (எதிர்ப்பு), திருஷ்டாந்தம் (உதாகரணம்) மற்றும் பிரத்யுதாஹரணம் (எதிர் உதாகரணம்) ஆகியவைகளை யூகித்தறிய வேண்டும். -9

அதாவது - ஈக்ஷத்யதிகரணம் என்பதில், "ததைக்ஷத" (அது பார்த்தது) என்ற வாக்கியமானது பிரதானத்தை குறிப்பதா அல்லது பிரம்மத்தையா என்று விசாரம் செய்யப்படுகின்றது. இந்த விசாரமானது பிரம்மம் சம்பந்தபட்டதாக இருப்பதால் பிரம்ம விசாரமே சாஸ்திர சங்கதி ஆகின்றது. "வாக்கியம் பிரம்மணி தாத்பர்யவத்" (இந்த வாக்கியம் பிரம்மத்தில் தாத்பர்யம் உடையதா இருக்கின்றது) என்ற தீர்மாணத்தால் சமன்வய அத்யாயத்தின் சங்கதி ஆகின்றது. ஈக்ஷணம் (பார்பது அல்லது விசாரிப்பது) சைத்தன்யமான பிரம்மத்தின் அசாதாரணமான (விசேஷமான) தன்மையானதால் ஸ்பஷ்ட பிரம்ம லிங்க வாக்கியம் (தெளிவாக பிரம்மத்தினை குறிக்கும் வாக்கியம்) ஆவதால் முதல் பாதத்தின் சங்கதி ஆகின்றது. இவ்வாறு எல்லாஅதிகரணங்களிலும் ஆங்காங்கு ஏற்றார்போல மூன்று சங்கதிகளையும் யூகித்தறிய வேண்டும். ஆவாந்தர சங்கதியானது பல வகைப்பட்டதாக இருக்கின்றது. ஆக்ஷேபம், திருஷ்டாந்தம், பிரத்யுதாகரணம், பிரசங்கிகம் முதலியவையாக. -9

இந்த அவாந்தர சங்கதிகளானது 'விஷயமறிந்தவர்களால் மட்டுமேவிசாரம் செய்யப்படுவதான இயல்புடையதால் அதனை இங்கு தெளிவாக நிரூபிக்கின்றோம்.

முன்னுள்ள அதிகரணத்தில் சித்தாந்த யுக்திகளை கண்டும், அடுத்த அதிகரணத்தில் பூர்வபக்ஷியின் யுக்திகளை கண்டும் அதனில் ஆக்ஷேபம் முதலிய சங்கதிகளை புரிந்து கொள்ளவேண்டும். -10

அது எவ்வாறென்றால், முதல் அதிகரணத்தில் பிரம்ம விசாரம் செய்யும் இந்த சாஸ்திரமானது துவங்கப்படவேண்டும் எனபது சித்தாந்தம். ஆதற்கு தரும் யுக்தி ___ பிரம்மம் சந்தேகம் உள்ள விஷயமானதால் (இருகிகறதா இல்லையா என்கிற சந்தேகம்) என்பது. இரண்டாம் அதிகரணத்தின் பூர்வம் பக்ஷம், "ஜகத் ஜன்மாதி" (ஜகத்தின் ஜன்மம் முதலியவற்றிற்கு) பிரம்மம் காரணமாக இருத்தல் இயலாது என்பது. அதற்கு தரப்படும் யுக்தி -ஜன்மம் முதலியவை ஜகத்தினுடையவையாக / ஜகத்தில் உள்ளதாக இருப்பதால் என்பது. இவை இரண்டையும் பரிசீலித்து ஆக்ஷேப சங்கதியினை அறிந்து கொள்ளவேண்டும். சந்தேகம் உள்ளதாக இருப்பதால் பிரம்மம் விசாரிக்கப்படவேண்டியது என்பது சரியல்ல. ஜன்மம் (தோற்றம்) முதலியவை வேறொன்றை சார்ந்ததாக இருப்பதால் அது பிரம்மத்தின் குறிப்பு ஆவதியலாததால் என்ற நிலையில் பிரம்மமே இல்லை என்று ஆவதால் அதனில் சந்தேகத்தன்மையும் விசாரத்தன்மையும் இருப்பது எவ்வாறு இயலும்,என்பது ஆக்ஷேப சங்கதியாகும். திருஷ்டாந்த மற்றும் பிரத்யுதாகரண சங்கதியானது இங்கு சுலபமாக நாம் தீர்மாணிக்க இயலும். அதாவது, சந்தேகம்யுடையது என்கிற காரணம் மூலம் பிரம்மமானது

விசாரிக்கப்படவேண்டியது என்பதுபோல ஜன்மம் முதலியவை வேறொன்றை சார்ந்திருப்பது என்ற காரணத்தால் பிரம்மத்திற்கு லக்ஷணம் (குறிப்பு) இல்லை என்பது திருஷ்டாந்த சங்கதியாகும். விசாரிக்கப்பட வேண்டியது என்பதற்கு காரணம் இருப்பதுபோல, அதற்கு லக்ஷணம் உள்ளதற்கு காரணமாக காணப்படவில்லை என்பது பிரத்யுதாகரண சங்கதியாகும். இந்த திருஷ்டாந்த மற்றும் பிரத்யுதாகரண சங்கதிகளானது எல்லா இடத்திலும் மிகவும் எளிதாக அறியப்படமுடியும். முன் அதிகரணத்தின் சித்தாந்தத்திலும் பின்னதிகரணத்தின் பூர்வபக்ஷமும் சமானமான காரணங்களுள்தாலும், பின் அதிகரணத்தின் சித்தாந்தத்தில் காரணமற்ற நிலையினையும் அந்த புத்தி உள்ளவரும் கற்பனை செய்து அறியமுடியும் என்பதால். ஆக்ஷேப சங்கதியானது தேவைக்கேற்ப கற்பனை செய்யப்படவேண்டும். அடுத்ததாக பிராசங்கிக சங்கதி (பிரசங்கத்தால் வந்த சங்கதி) உதாகரணம் மூலம் விளக்கப்படுகின்றது ___ தேவதாதிகரணத்தில் தேவதையின் அதிகாரமானது விசாரம் செய்யப்படுவதாக இருப்பதால், சமன்வய அத்யாயத்தில் மூன்றாம் பாதமானது ஞேய பிரம்ம வாக்கியத்தினை விசாரம் செய்யும் சங்கதியின் இன்மை இருந்தாலும் அங்கு பிரசங்கமானது நம் புத்தியிலிருப்பதால் அதன் மூலம் அவாந்தர சங்கதியானது யூகிக்கப்படவேண்டும். அதாவது, முன் அதிகரணத்தில் "அங்குஷ்டமாத்ர புருஷ" (கட்டை விரலளவு புருஷன்) என்பது பிரம்மத்தினை குறிப்பதானதால், மனிதனின் இதயத்தினை ஓப்பிடும் போது பிரம்மம் அங்குஷ்ட மாத்திரம் ஆகின்றது, சாஸ்திரமானதில் மனிதனுக்கு தகுதி உள்ளது என்பதால் என்பது கூறப்பட்டது. இந்த நிலையில் பிரசங்கத்தில் தேவதாதிகரணமானது புத்தியில் நிற்பதாகின்றது, என்பதால் இது பிராசங்கிக சங்கதி ஆகும். இவ்வாறு, நியாய சங்கதிகளானது நிரூபிக்கப்பட்டதாகின்றது. - 10

## <u>முதல் அத்யாயம் - முதல் பாதம்</u>

தெளிவான பிரம்மலிங்கம் கூடியதான வாக்கிய விசாரம்.

இன் ஒவ்வொரு அதிகரணத்தின் நான்கு அவயவமும்(பகுதியினையும்) இரு சுலோகங்களில் சங்கிரகித்து காண்பிக்கிறோம்.

### <u>1. ஜிஞ்ஞாசாதிகரணம் சூத்-1.</u>

முதல் அதிகரணத்தினை இயற்றுகின்றார்.

**<u>விஷயம் :-</u>** பிரம்ம விசாரம் செய்யும் சாஸ்திரம்.

**<u>சந்தேகம் :-</u>** இது (விசாரம்) துவங்க அவசியம் உண்டா இல்லையா.

**<u>பூர்வபக்ஷம் :-</u>** இருள் - வெளிச்சம் போன்று ஒன்றிற்கொன்று விரோதமான ஜடமான உடல் முதலியவையும் சேதனமான ஆத்மாவில் பரஸ்பரம் அத்யாசமானது நிரூபிக்க இயலாது. சந்தேகம் மற்றும் பிரயோஜனம் இன்மையால், நான் உள்ளேனா இல்லையா என்ற சந்தேகம் எவருக்கும் இல்லை. தன்னை குறித்த தீர்மாண அறிவு எல்லோருக்கும் இருப்பதால், முக்தி எனப்படும் பலன் அனுபவிக்கப்படாததாலும் சாஸ்திரம் துவங்க எந்த காரணமும் இல்லை.

**<u>சித்தாந்தம் :-</u>** பற்றற்றது ஆத்மா (அசங்கோ ஹ்யயம் புருஷ), இந்த ஆத்மாவே பிரம்மம் (அயமாத்மா பிரம்ம) என்பது முதலான ஷ்ருதிகள் பற்றற்ற பிரம்மமே ஆத்மா என்கின்றது. சாமானியருக்கு உடல் முதலியவற்றில் ஆத்மா என்கிற புத்தி உள்ளதால். பிரம்மம் ஆத்மாவா அல்லது உடல் ஆத்மாவா என்கிற சந்தேகம் எழுகின்றது. மோஷமோ ஷ்ருதியினாலும் வித்வான்களின் அனுபவத்தினாலும் தீர்மாணமாகின்றது. அதனால், சந்தேகமும் பலனும் இருப்பதால் அபரோஷ நிச்சயத்திற்கு வேதாந்த வாக்கியத்தின் தாத்பார்யத்தினை விசாரம் செய்வதான இந்த சாஸ்திர துவங்க வேண்டும். (11-12)

"ஆத்மா வா அரே திரஷ்டவ்ய, ஷ்ரோதவ்யோ, மந்தவ்யோ, நிதித்யாஸிதவ்ய" (ஆத்மாவினையே மைத்ரேயி, அறியவேண்டும், கேட்டல், சிந்தித்தல் மற்றும் தெளிவும் அடையவேண்டும்) என்ற இடத்தில் ஆத்மாவினை அடைவதான பலனை உத்தேசம் செய்து அதற்கு சாதனமாக கேட்டல் முதலானவைகள் விதிக்கப்பட்டுள்ளது. சிரவணம் (கேட்டல்) என்பது வேதாந்த வாக்கியங்களானது பிரம்மத்தினை குறிப்பதிலேயே தாத்பர்யம் உடையது என்பதினை தீர்மாணம் செய்ய உதவி புரிவதான நியாய (அதிகரண) விசாரம். இப்படிப்பட்ட விசாரத்தினை விதிக்கும் வாக்கியமானது விஷயம் ஆகும். இந்த விஷயமானது இரு சுலோகத்தினாலும் சங்கிரகம் செய்யப்படவில்லை என்று சந்தேகம் அடைய தேவையில்லை, காரணம்,சந்தேகத்தினை சங்கிரகம் செய்வதினாலேயே விஷயமும் சங்கிரகம் செய்யப்பட்டதாக பொருள்படுகின்றது. பிரம்ம விசாரமான நியாய நிர்ணயம் செய்யும் சாஸ்திரம் துவங்கப்படவேண்டுமா இல்லையா என்பது சந்தேகம். பூர்வபக்ஷம் மற்றும் உத்தரபக்ஷம் (சித்தாந்தம்) இரண்டுமே சந்தேகத்தின் கரு என்று அறியவேண்டும். இங்கு, ஆரம்பிக்கக்கூடாது என்ற நிலையுண்டாகின்றது. விஷயமும் பிரயோஜனமும் இல்லாததால். சந்தேகத்திற்கிடமானதே விசாரம் செய்ய விஷயமாவது இயலும். பிரம்மமோ சந்தேகத்திற்கிடமில்லாதது என்பதால். ஏனெனில், பிரம்மம் பிரம்மஆகாரமாக (சுவரூபமாக) சந்தேகத்திற்கிடமாகிறதா அல்லது ஆத்ம சுவரூபமாகவா முதலாவது இயலாது, "சத்யம் ஞானம் அனந்தம் பிரம்ம" ( பிரம்மம் சத்தியம், ஞானம், அனந்தம் ஆகும்) என்ற வாக்கியம் மூலம் பிரம்ம

சுவரூபமானது நிச்சயம் ஆவதால். இரண்டாவதும்இல்லை, நான் என்ற எண்ணமாக (ஞானமாக) ஆத்ம சுவரூபமாகவும் நிச்சயம் அடைவதால். அத்யஸ்த (ஏற்றி) பார்க்கப்பட்ட ஆத்ம விஷயமான பிரமையாக உள்ளதே நான் என்ற அறிவு என்றால், தவறு, அத்யாசமானது (ஏற்றிபார்த்தல்) நிரூப்பிக்கப்படாததால். இருள் - வெளிச்சம் போன்று விரோதமான சுபாவம் உள்ளதான ஜடம் - சைத்தன்யம், உடல் - ஆத்மாவில் , சிப்பி ___வெள்ளி போன்று அன்யோன்ய தாதாத்மிய (பிரிக்கமுடியாத) அத்யாசமானது நிரூப்பித்தல் இயலாது. அதனால், இங்கு எந்தவித பிராந்தியும் (தவறான அறிவும்) ஷ்ருதி மற்றும் நான் என்கிற அறிவினால் நிரூபிக்கப்பட்டதில் எந்தவித சந்தேகமும் இல்லாததால், விசாரத்திற்கு விஷயமானது ஆவதில்லை. அதுமட்டுமல்லாமல், எந்தவித பிரயோஜனத்தினையும் நாம் காணவில்லை. கூறப்பட்டபடி பிரம்ம ___ ஆத்மா ஆனது. தீர்மாணம் ஆவதாக இருந்தாலும் முக்தியானது அங்கு காணப்படுவதில்லை. அதனால், பிரம்மம் விசாரம் செய்யப்பட்ட தகுதியில்லாதது என்பதால் சாஸ்திர துவங்குவது இயலாதுஎன்று பூர்வபக்ஷம்

அதற்கு கூறுவோம் - சாஸ்திரம் துவங்கப்படவேண்டும் எதனால், விஷயம் மற்றும் பிரயோஜனம் இருப்பதால் ஷ்ருதி மற்றும் "நான்" என்கிற அறிவில் பலவித நிலையுள்ளதால் சந்தேகத்திற்கிடமானது பிரம்ம ___ஆத்மா விஷயமானது. "அயமாத்மா பிரம்ம" (இந்த ஆத்மா பிரம்மம்) என்ற ஷ்ருதியானது பற்றற்ற (அசங்கமான ___ சங்கமில்லாத) பிரம்மத்தினை ஆத்மாவாக உபதேசிக்கின்றது. "அஹம் மனுஷ்ய" (நான் மனிதன்) என்பது முதலான நான் என்கிற அறிவானது உடல் முதலியவற்றில்தாதாத்மிய அத்யாசத்தினல்அதனை ஆத்மாவாக அறிகின்றது. அத்யாசமானது நிரூபிக்க கடினம் என்பது நமக்கு அலங்காரமே (தோஷமில்லை) அதனால், சந்தேகத்திற்கிடமான விஷயம் இங்கு விசார விஷயமாகின்றது. அது தீர்மாணமாவதால் முக்தி எனப்படும் பிரயோஜனமானது ஷ்ருதியினாலும் வித்வான்களின் அனுபவத்தாலும் பிரசித்தமாக அறியப்படுகின்றது. அதனால, வேதாந்த வாக்கியத்தினை விசாரம் செய்வது மூலம் பிரம்மமானது விசாரம் செய்ய தகுதியுடைதால் சாஸ்திரமானது துவங்க தகுதி உடையதாக ஆகின்றது. என்பது சித்தாந்தம். - (11 ___ 12)

## 2. ஜன்மாதி அதிகரணம்

### ஜன்மாத்யஸ்ய யத: -2

இரண்டாவது அதகரணம் இயற்றப்படுகிறது.

**சந்தேகம் :-** பிரம்மத்திற்கு லக்ஷணம் (குறிப்பு) இருத்தல் இயலுமா, இயலாதா.

**பூர்வபக்ஷம் :-** பிறப்பு (தோற்றம்) முதலியது ஜகத்தின் தர்மமானதாலும், சத்தியம் முதலியவை வெவ்வேறு பொருளை குறிப்பதாலும் அவை பிரம்மத்தின் லக்ஷணமாக, தடஸ்த அல்லது ஸ்வரூப லக்ஷணமாக இருத்தல் இயலாது.

**சித்தாந்தம் :-** ஜகத்தின் தர்மமானாலும் அதன் தோற்றம் முதலியதற்கு காரணம் பிரம்மமே. எது பாம்பாக காட்சி அளிக்கின்றதோ அதுவே மாலை என்கிற பாத-சாமானாதிகரண்யம் (ஒரே இடத்தில் மற்ற விஷயம் நிராகரிக்கப்படுவது) மூலம் தடஸ்த லக்ஷணம் நிரூபணமாகின்றது. உலகத்தில் பல்வேறு பொருளை குறிக்கும் சத்தியம் முதலியவையும் பிரம்மத்தை குறிப்பதாகவே உள்ளது, இதுவே பிரம்மத்தின் சுவரூபலக்ஷணம் (ஜகத்திற்கு காரணம் பிரம்மம் - அபின்ன —— நிமித்த உபாதான காரணம்) - (13 —— 14)

"யதோ வா இமானி பூதானி ஜாயந்தே ஏன ஜாதானி ஜீவந்தி, யத்பிரயாந்தியபி சம்விஷந்தி தத் விஜிஞ்ஞாசஸ்வ தத் பிரம்ம" (எதனிலிருந்து இந்த ஜீவன்கள் தோன்றியதோ, எதனால் அவை வாழ்கின்றதோ. அழிந்து (இறந்து) எதனில் லயமடைகின்றதோ அதனை அறிய ஆசைபடு, அதுவே பிரம்மம்) என்று, "சத்யம் ஞானமனந்தம் பிரம்ம" (சத்தியம், ஞானம் மற்றும் அனந்தம் இந்த பிரம்மம்) என்கிற இரு வாக்கியமும் இந்த அதிகரணத்திற்கு விஷயமாகின்றது. பிரயந்தி என்றால் இறப்பதானது என்றுபொருள் இங்கு கூறப்பட்டது பிரம்மத்தின் லக்ஷணம் ஆவது இய அலுமா இயலாதாஎன்பது சந்தேகம் .

ஆவது இயலாது என்பது பூர்வபக்ஷியின் வாதம் ஏனென்றால், ஜன்மம் (தோற்றம்) முதலியவை அதன் (பிரம்மத்தின்) லக்ஷணமா இல்லை சத்தியம் முதலிவையா. முதலில் கூறியது (ஜன்மம் முதலிய) ஆவது இயலாது, காரணம், அவை ஜகத்தின் தர்மம் ஆனதால். அதில் நிலைபட்டதானது என்பதால், பிரம்மத்ததோடு எந்த சம்பந்தமும் அதற்கு இல்லை. இரண்டாவது கூட (சத்திய முதலிய) உலகத்தில் பிரசித்தமான பொருளில் ஏற்றால்,சத்தியம் முதலியவைக்கு அவை வேறு பொருள்படும்படி இருப்பதால் அவை அகண்டமான(பிறிவற்ற) பிரம்மத்தை குறிப்பது இயலாது. பிரசித்தமல்லாத வேறு சத்தியம் முதலியவை பிரம்ம லக்ஷணம் என்பது ஏற்புடையதல்ல. அதனால், தடஸ்த மற்றும் சவரூப லக்ஷணமும் அதற்கு இல்லை.

இதற்கு கூறுவோம் என்று சித்தாந்தியின் பதில். ஏந்த லக்ஷணம் (குறிப்பு) சுவரூபத்தோடு அடங்கியில்லாமல் வேறு சொற்பொருளை(விஷயத்தினை) வேறுபடுத்த காரணமாகின்றதோ அதுவே தடஸ்த லக்ஷணம் ஜன்மம் முதலியவை

வேறு இடத்தில் (ஜகத்தில்) நிலைபட்டதாக இருந்தாலும் அதற்கு காரணம் பிரம்மம் என்கிற கற்பனையால் சம்பந்தமானது தடஸ்த லக்ஷணம்ஆகும். "யோ புஜங்க ஸ ஸ்ரக்" (எது பாமபோ அது மாலை) என்பதுபோல. எது ஜகத்திலன் காரணம் ஆகிறதோ அது பிரம்மம் என்று கற்பனையான விஷயம் மூலம் அதனை குறிப்பது (சுட்டிக்காட்டுவது) இயலும் என்பதால். வேறு பொருள்படும் சொற்களான அப்பா, மகன், சகோதரன், மருமகன் முதலியவை ஒரே தேவதத்தனை குறிப்பதாக உள்ளதில் எந்த விரோதம் இல்லாததுபோல, உலகத்தில் உபயோகிக்கப்படும் வேறுபொணரள்படும் சொற்களான சத்தியம் முதலியவையும் அகண்டமான பிரம்மத்தை குறிப்பதக உள்ளது. சுவரூபலக்ஷணத்தின் நிரூபணம். இவ்வாறு இரண்டும் (தடஸ்த மற்றும் சுவரூப லக்ஷணங்களும்) இங்கு இயலும். (13 —— 14)

## <u>3. ஷாஸ்த்ரயோனித்வ அதிகரணம்.</u>

### <u>ஷாஸ்த்ர யோனித்வாத் - 3</u>

மூன்றாம் அதிகரணத்தின் முதல் வர்ணகத்தை (விளக்கம்) செய்கின்றார்.

**<u>சந்தேகம் :-</u>** பிரம்மம் வேதத்தினை உண்டாக்கியதா இல்லையா.

**<u>பூர்வபக்ஷம் :-</u>** "வாசா விரூப நித்யயா" என்ற ஷ்ருதி மூலம் வேதம் நித்தியம் என்று ஆவதால் பிரம்மம் அதை சிருஷ்டிக்கவில்லை (அதற்கு கர்த்தா இல்லை).

**<u>சித்தாந்தம் :-</u>** பிரம்மத்தின் மூச்சுக்காற்றே வேதம் என்று கூறப்பட்டதால், பிரம்மம் வேதத்தின் கர்த்தா ஆகும். வேதம் போன (பூர்வ) கர்ப்பத்தில் (சிருஷ்டியில்) செய்யப்பட்டது போனறே இப்பொழுதம் உள்ளதால் நித்தியம் எனப்படுகிறது. இந்த ஜகத் முழுவதினையும் நியமிப்பது முதலியவையான வேதத்தினை சிருஷ்டித்ததால் பிரம்மம் சர்வவித் (எல்லாவற்றையும் தெளிவாக அறிவது) ஆகின்றது. ( 15 —— 16 )

"அஸ்ய மஹதோ பூதஸ்ய நிஷ்வஸிதமேதத் யத்ருக்வேதோ யஜுர்வேத ஸாமவேத" (இந்த மஹத்தான (மேன்மையான) வியாபித்திருப்பதான பிரம்மத்தின் சுவாசமே ரிக்வேதம், யஜுர்வேதம் மற்றும் சாமவேதமாகும்) என்ற வாக்கியம் விஷயம்.

அதாவது, ரிக்வேதம் முதலியவை இந்த நித்திய சித்தமான பிரம்மத்தின் மூச்சுக்காற்றிற்கு சமமாக முயர்ச்சியில்லாமல் தோன்றுவது என்று பொருள். இந்த பிரம்மம் வேதத்தின் கர்ததாவன அல்லது இல்லையா என்பது சந்தேகம்.

பிரம்மம் வேதத்தினை செய்யவில்லை. காணம், வேதமானது நித்தியமானதால், இதனையே "வாசா விரூப நித்யயா" என்கிற மந்திரத்தில் விரூபம் என்று தேவதையினை விளிச்சொல்லால்கூறி நித்தியமான வேதத்தில் வார்த்தைகளால் துதிக்கினறேன் என்று பிரார்த்திக்கின்றார். நித்தியமான வார்த்தைகளானது வேதமாயாகும். "அனாதிநிதனா நித்யா வாகுத்ஸ்ருஷ்டா ஸ்வயமபுவா ஆதௌ வேதமயீ திவ்யா யத சர்வா ப்ரவ்ருத்தய" (பிரம்மானது முதலில் அனாதியும் அநந்தமுமான நித்தியமான வார்த்தைகளான வேதத்தினை சிருஷ்டித்தது, எதன்மூலம் மற்ற எல்லா பிரவிருத்தியும் செய்யப்படுகிறதோ) என்று ஸ்மிருதியும் கூறுகினறது. என்பதால் வேதத்தினை படைத்தது பிரம்மம் அல்ல என்ற நிலையில் கூறுவோம். பிரம்மமானது வேதத்தினை படைத்ததாக ஆவது இயலும், எவ்வாறு என்றால், மூச்சுக்காற்று போன்று என்கிற நியாயத்தால் முயர்ச்சியில்லாமல் தோற்றுவித்தது என்பது தெளிவாவதால். "தஸ்மாத் யஞாத் சர்வஹுத ருச ஸாமானி ஜஞிரே" (அந்த எல்லோரும் போற்றும் யஞரூபமான பிரம்மத்திலிருந்து ரிக் மற்றும் சாமமானது தோன்றியது) என்று எல்லோரும் எல்லா யாகத்தினால் அந்த பிரம்மத்தினையே யஞமாக துதிக்கின்றனர் என்று யஞ்ஞம் என்பதான் பிரம்மம் மூலம் வேதத்தின் தோற்றமானது தெளிவாக என்பது மூலம் கூறப்பட்ட விஷயங்களில் காளிதாசர் முதலியவர் மூலம் புத்தியின் சிந்தனையால் எழுதப்பட்டவைகளிலிருந்து வேறுபாடானது கூறப்பட்டதால் அது அபௌருஷேயம் (மனிதரால் எழுதப்படாதது) என்று தெளிவாகின்றது. வேதமானது அப்பழ சொல் - பொருள் சம்பந்தமானது சிந்திப்பது மூலம் எழுதப்படாதது, ஒவ்வொரு சிருஷ்டியின் போதும் கடந்த சிருஷ்டியில் உள்ளது போன்று தோற்றுவிக்கப்படுவதால் பிரவாகரூபமாக நித்தியத்தன்மையினை அடைகின்றது. இப்படிஇந்த ஜகத்தினை பிராகசிப்பதான (வேதம் மூலம் பழைய சிருஷ்டியினை போன்றே தோற்றுவிக்கப்படுவதால்) வேதமானது பிரம்மனால் தோற்றுவிக்கப்பட்டது என்பதில் மூலம் பிரம்மத்தின் சர்வஞ்ஞத்தன்மையானது நிரூபிக்கப்பட்டதாக ஆகின்றது. ( 15 —— 16 )

இரண்டாவது வர்ணகம் (விளக்கம்) கூறுகிறார்.

**சந்தேகம் :-** பிரம்மம் மற்ற பிரமாணம் மூலமும் அறியப்படுகிறதா அல்லது வேதம் மூலம் மட்டுமா.

**பூர்வபக்ஷம் :-** பானை முதலியவை போன்று விஷயம் ஆவதால் பிரம்மம் மற்ற பிரமாணம் மூலமும் அறியப்படும்.

**சித்தாந்தம் :-** உருவம், குறி முதலியவை அற்றதால் பிரம்மம் மற்ற பிரமாணங்களுக்கு விஷயம் ஆவது இல்லை. "தம் து அபௌநிஷத்" (அந்த உபநிஷத் மூலம் அறியப்படும்) என்பது முதலான ஷ்ருதிகள் பிரம்மத்தினை அறிய வேதம் மட்டுமே பிரமாணம் என்று கூறப்பட்டுள்ளது. ( 17 —— 18 )

"தம் த்வௌபநிஷதம் புருஷம் ப்ருச்சாமி" (அந்த உபநிஷதம் மூலம் அறியப்படும் (நிரூப்பிக்கப்படும்) புருஷனை பற்றி கேட்கிறேன்) என்பதாக யாஞ்ஞவல்கியர் சாகல்யரை கேட்டுகும் வாக்கியத்தில் பரபிரம்மமான புருஷன் உபநிஷத் மூலம் அறியப்படுவது என்பது காணப்படுகிறது. இந்த வாக்கியமே இங்கு விஷயம் ஆகும். இங்கு, பிரம்மமானது பிரத்யக்ஷம் முதலிய பிரமாணங்களுக்கு விஷயமாக ஆகுமா அல்லது ஆகாதா என்பது சந்தேகம் பூர்வபக்ஷமானது மிகவும் தெளிவாக இருக்கின்றது.

ரூபம், ரசம் முதலியவை இல்லாததனால் பிரம்மமானது புலன்கள் மூலம் அறிவது இயலாது. லிங்கம் (குறி——அடையாலம்) சாதுருஷ்யம் (சமானத்தன்மை) முதலியவை இல்லாததால் அனுமானம், உபமானம் முதலியவற்றிற்கு விஷயமாவது இயலாது. உபநிஷதம் மூலமே அறியப்படுகிறது என்று கூறப்பட்டதாலும் "நாவேதவின் மனுதே" (வேதத்தினை அறியாதவர் அந்த பிரம்மத்தினை அறிவதில்லை) என்று வேறொரு (முறையினை நிராகரிக்கும் ஷ்ருதியினாலும் பிரம்மம் வேதத்தின் மூலமே அறியப்படுகிறது என்று நிச்சயமாகின்றது. பாஷ்யகாரர் "ஜன்மாதி" சூத்திரத்தினில் ஷ்ருதி முதலியவையும் அனுபவம் முதலியவையும் இங்கு பிரமாணமாக ஏற்கப்படும் என்று கூறியிருக்கின்றார் என்றால், மிகவும் சரி, முதலில் ஷ்ருதியின் மூலம் அறியப்பட்டதான பிரம்மத்தினில் அனுவாதமாக (மறுமொழிதல்) அனமானம் மற்றும் அனுபவம் ஏற்கப்பட்டுள்ளதால். ஆதனால் வேதத்தினால் மட்டுமே அறியப்படுவது பிரம்மம். -3.

## 4. சமன்வயாதிகரணம்

## தத் து ஸமன்வயாத் - 4

நான்காம் அதிகரணத்தின் முதல் விளக்கம்.

**சந்தேகம் :-** வேதாந்தம் கர்த்தா (செய்பவர்) மற்றும் தேவதை முதலியவை நிரூபிப்பதுமூலம் கர்மத்தின் அங்கமாகின்றதா இல்லை தனித்து பிரம்மத்தினை நிரூபிப்பதாக உள்ளதா.

**பூர்வபக்ஷம் :-** வேதாந்தம் சுவர்கம் முதலிய சாதனங்களை அடைவதற்கு காரணமான யஞ்ஞம் முதலிய அனுஷ்டானங்கில் உதவிகரமாக இருக்கும் கர்த்தா மற்றும் தேவதையினை குறிப்பதாக உள்ளது, பிரம்மத்தினை நேரடியாக குறிப்பது இல்லை.

**சித்தாந்தம் :-** வேதாந்தாந்தம் கர்மகாண்ட பிரகரணத்தில் இல்லாமல் வேறு பிரகரணத்தில் உள்ளதாலும், ஆறு விதமான உபகிரமம் முதலிய லிங்கங்கள் மூலமும் (குறிகளும்) வேதாந்தம் நேரடியாக பிரம்மத்தினை நிரூபிப்பதாக இருப்பதாலும் என்று பிரகரண (பகுதி) குறித்த சந்தேகம் நிராகரிக்கப்படுகிறது. அடுத்து அனர்த்தமானது (பிரச்சனைகளானது) நீங்குவது என்ற பிரயோஜம் இருப்பதினால் பிரம்மத்தினை நிரூபிப்பதாக ஏற்பதில் எந்த பிரச்சனையும் இல்லை. இதனால் அனுஷ்டானத்திற்கு உபயோகமாக கர்த்தா மற்றும் தேவதையின் மூலம் கர்மத்தின் அங்கமாக ஏன் ஏற்கவேண்டும்.

விஷயம் மற்றும் சந்தேகம் மிகவும் தெளிவாக உள்ளது. அதாவது, ஜீவனை (குறிக்கும்) வாக்கியம் கர்த்தாவினை குறிப்பது மற்றம் பிரம்மத்தினை குறிக்கம் வாக்கியம் தேவதையினை குறிப்பது. சிருஷ்டி முதலியவாக்கியங்களோ சாதனங்களை குறிப்பது. இவ்வாறு ஏற்கும்போது வேதாந்த வாக்கியங்களானது அனுஷ்டானத்திற்கு உபயோகமாக இருப்பது இயலும். பிரம்மத்தினை குறிப்பதாக ஏற்றால் அனுஷ்டானம் செய்வதற்கு ஏற்புடையதாக இல்லாததால் பிரயோஜனமற்றது என்று ஆகும். ஏன்பதால், வேதாந்த வாக்கியங்கள் கர்த்தா, தேவதை மற்றும் சாதனங்களை நிரூப்பிப்பதாகவே இருப்பது ஆகும்.

**சித்தாந்தம் :-** அதற்கு கூறுவோம் வேதாந்தமானது பிரம்மத்தினை நிரூபிப்பதாகவே இருப்பது என்று எவ்வாறு என்றால், வெவ்வேறு பிரகரணங்களில் கூறப்பட்டவையான அவைகள் கர்த்தா முதலியவையினை நிரூபிப்பது மூலம் கர்மத்தினை சேஷமாக (அங்கமாக) ஆவது இயலாது. தாத்பர்யத்தினை நிச்சயம் செய்ய உதவிபரமாக இருக்கும் அறுகுறிகள் (ஆறு லிங்கங்கள்) மூலம் பிரம்மத்தினை குறிப்பதாக இருப்பதாலும். அறுகுறிகளானது பூர்வ ஆச்சாரியர்களினால் இவ்வாறு கூறப்பட்டுள்ளது

உபகிரமம் உபசமஹரெள அப்யாஸோ அபூர்வதா பலம் 1

அர்த்தவாத உபபத்தீ ச லிங்கம் தாத்பர்ய நிச்சயே 11 என்று

(முன்னுரை —— முடிவுரை, மீண்டும் மீண்டும் கூறுதல், சிறப்பு, பலன் போற்றி கூறுதல் மற்றும் உதாகரண தர்க்கம் என்ற ஆறும் தாத்பரியத்தினை நிச்சயிக்கும் (அடையாளங்கள்) குறிகளாகும் )

**உபகிரமம் :-** "சதேவ சோம்ய இதமக்ர ஆசீத்" (மகனே, சிருஷ்டிக்கு முன்னர் இவை முழுதும் சத்தாகவே இருந்தது)

**உபசம்ஹாரம் :-** "ஐததாத்ம்யம் இதம் ஸர்வம், தத் சத்யம் ஸ ஆத்மா தத்வமஸி" (இவை எல்லாம் ஆத்மாவே, அதுவே சத்தியம்,அதுவே ஆத்மா அது நீ ஆகிறாய்) இவை இரண்டும் பிரம்மத்தினை குறிப்பதாக உள்ளதால் ஒரே ரூபமானது என்பதால் ஒரே லிங்கமாக ஏற்கப்படுகிறது.

**அப்யாசம் :-** மீண்டும் மீண்டும் பலமுறை "தத்வமஸி" என்று கூறுவது.

**அபூர்வதா :-** வேதாந்தம் மூலமாக அல்லாமல் வேறு பிரமாணங்களால் பிரம்மம் அறியப்படுவது இல்லை என்பது.

**பலம் :-** ஒன்றை அறிவதால் எல்லாம் அறியப்பட்டதாக ஆவது.

**அர்த்தவாதம் :-** சிருஷ்டி, ஸ்திதி, லயம். பிரவேசம் மற்றும் நியமனம் இவை ஐந்தும்.

**உபபத்தி :-** களிமண் முதலிய உதாரணம்.

இந்த குறிகளானது வேதாந்தமானது பிரம்மத்தினை நிரூப்பிதாக உள்ளது தெறிகின்றது. கர்மத்தினை அனுஷ்டானம் செய்யாமல் வேறு வழியில் எந்த பலனும் அடைவது இயலாது என்பதும் இயலாது, "இது பாம்பல்ல" என்பது முதலியவையில் ஞானத்தினால் மட்டுமே துன்பம், பயம் முதலிய பிரச்சனைகள் நீங்குமவது இயலும் என்பதால். ( 19 —— 20 )

இரண்டாவது வர்ணகம்.

**சந்தேகம் :-** வேதாந்த வாக்கியம் உபாசனையினை குறிப்பதா அல்லது பிரம்மத்தினையா.

**பூர்வபக்ஷம் :-** சாசனம் செய்வதால் சாஸ்திரம் எனப்படுகின்றது. (சாசனம்-விதிப்பது) "ஆத்மா வா அரே" என்பது முதலாக உபாசனையினை விதிக்கின்றது. ஷ்ரோத்தவ்ய என்பதின் மூலம் சிரவணத்தினையும், அதன் பின்னர் மந்தவ்ய என்று மனனத்தினையும், விதிப்பதால், வேதாந்தம் உபாசனையினை குறிப்பது.

**<u>சித்தாந்தம் :-</u>** கர்த்தாவிற்கு (செய்பவருக்கு) அதீனமாக இல்லாததை விதிப்பது இயலாது. சித்த (இருப்பதான) விஷயத்தினை குறிப்பதாலும் சாஸ்திரம் எனப்படும். தத்துவஞானம் அடைவதற்கு முன்னர் மனனம் முதலியவை விதிக்கப்பட்டுள்ளது என்பதால் பிரம்மத்தை குறிப்பதே ஆகும்.

ஏகதேஷி (ஒரு பக்ஷத்தை ஏற்பவர்) கூறுவது. - பிரம்மத்தை குறிப்பதாக இருந்தாலும் வேதாந்த வாக்கியங்கள் அதோடு முடிவடைவதில்லை. பின்னர் எவ்வாறு என்றால், பிரம்மத்தினை பரோக்ஷமாக நிரூபித்துவிட்டு பின்னர் அபரோக்ஷமாக அதை அறிய உபாசனையினை விதிக்கின்றது என்று ஏற்பதால் வேதாந்தமானது சாஷனம் (விதிக்கப்படுவது) என்பதால் சாஸ்திரத்தன்மை அடைகின்றது. அதுமட்டுமல்லாமல், "ஷ்ரோத்தவ்ய" என்று சிரவணம் மூலம் சப்த ஞானத்தினை விதித்து அடுத்து "மந்தவ்ய நிதித்யாஸிதவ்ய" என்பது முதலியதாக அனுபவ ஞானத்தை தருவதான மனனம் (சிந்தித்தல்) நிதித்யாசனம் (தெளிதல்) தெளிவாக விதிக்கப்பட்டுள்ளது அதனால் உபாசனையினை விதியதே வேதாந்தம் என்ற நிலையில்.

**<u>சித்தாந்தி :-</u>** கூறுவோம். இங்கு உபாசனையினை விதிப்பது என்பது இயலாது. செய்வது, செய்யாதது மற்றும் வேறுமுறையில் செய்வது இயலாத புருஷதந்திரமற்றதால். சாஸ்திரத்தன்மை என்பதும் அனுஷ்டானத்தினை சாஷனம் செய்வதினால் மட்டுமே அடையப்படுவது என்பது இல்லை. சித்த (அடையப்பட்ட) விஷயத்தினை உபதேசிகப்பதாலும் (சாஸ்திரத்தன்மை) அடையப்படும். சப்த ஞானம் அடையப்பட்ட பின்னர் அதனை அறிய மனனம் முதலியவை விதிக்கப்பட்டது என்று கூறுதல் இயலாது. "பத்தானவனாக நீ இருக்கிறாய்" என்பது போல சப்தமே அபரோக்ஷஞானத்தினை அடைவிப்பது இயலும் என்பதால் அந்த சாப்தஞானத்திற்கு முன்னர் அசம்பாவனா மற்றும் விபரீத பாவனா ( தவறான அறிவு மற்றும் எதிர்மடையான அறிவு) நீக்கும் செயலாக கர்த்தாவினால் செய்யப்படுவதான மனனம் முதலியவை விதிக்கப்பட்டதால். அதனால், "தத்வமஸி" என்பது முதலான வேதாந்த வாக்கியங்கள் பிரம்மத்தினை குறிப்பதிலேயே முழுமையடைகின்றன. ( 21 —— 22 )

**<u>ஓம் தத் சத்</u>**

---